# மாகாண சுகாதார அமைச்சு,
# வட மாகாணம்

## படகோட்டுநர் பதவிக்கான
## சேவைப் பிரமாணக் குறிப்பு
(ஆரம்ப மட்ட பகுதித்தேர்ச்சி வகுதி – PL 2)

நடைமுறைக்கு வரும் திகதி – 01.01.2013

Provincial Ministry of Health, Northern Province
Service Minutes for the post of Boatman
Primary Semiskilled category - PL 2
w.e.f. 01.01.2013

பொருளடக்கம்:


| தொ.இல. | விடயம் | பக்கம் |
|---|---|---|
| 01. | செயல்வலுப்பெறும் திகதி | - 03 |
| 02. | வரைவிலக்கணங்கள் | - 03 |
| 03. | நியமன அதிகாரி | - 03 |
| 04. | சேவை பற்றிய விபரங்கள் | - 03 |
| 05. | பதவியின் தன்மை | - 04 |
| 06. | சம்பளம் | - 04 |
| 07. | பதவி விபரம் | - 04 |
| 08. | பதவிக்கான நியதிகளும் நிபந்தனைகளும் | - 04 |
| 09. | ஆட்சேர்ப்பு முறைமை | - 05 |
| 10. | வினைத்திறமைகாண் தடை | - 07 |
| 11. | மொழித்தேர்ச்சி | - 07 |
| 12. | தரங்களுக்குப் பதவியுயர்த்துதல் | - 07 |
| 13. | உள்ளீர்த்தல் | - 09 |
| 14. | இடைக்கால ஏற்பாடுகள் | - 09 |
| 15. | கட்டுப்பாடு | - 10 |
| 16. | ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் | - 10 |
| 17. | அனுமதி | - 11 |
| 18. | படகோட்டுநர் பதவிக்கான கடமைகள் - இணைப்பு 01 | - 12 |
| 19. | மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் - இணைப்பு 02 | - 14 |
| 20. | மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை - இணைப்பு 03 | - 15 |
| 21. | திறந்த ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் - இணைப்பு 04 | - 16 |
| 22. | திறந்த ஆட்சேர்ப்புக்கான எழுத்துப்பரீட்சை - இணைப்பு 05 | - 17 |
| 23. | 1வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - இணைப்பு 06 | - 18 |
| 24. | 2வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - இணைப்பு 07 | - 19 |
| 25. | 3வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - இணைப்பு 08 | - 20 |
| 26. | பதவியுயர்வுக்கான விண்ணப்ப படிவ மாதிரி – GP/G/1 - இணைப்பு 09 | - 21 |
| 27. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரம் - இணைப்பு 10 | - 23 |

## மாகாண சுகாதார அமைச்சு, வட மாகாணம்
## படகோட்டுநர் (BOATMAN) பதவிக்கான சேவைப்பிரமாணக் குறிப்பு
## (ஆரம்ப மட்ட பகுதித்தேர்ச்சி வகுதி PL- 2)

வட மாகாண சுகாதார அமைச்சின் கீழான ஆரம்ப மட்ட பகுதித்தேர்ச்சி வகுதியைச்சேர்ந்த (PL-2) படகோட்டுநர் (BOATMAN) பதவிக்கான இச் சேவைப்பிரமாணக் குறிப்பு 01.01.2013 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

### 01. வரைவிலக்கணங்கள்

i. **"சேவைப்பிரமாணக் குறிப்பு"** என்ற கலைச்சொல்லால் கருத வேண்டியது, வட மாகாண சுகாதார அமைச்சின் கீழான, ஆரம்பமட்ட பகுதி தேர்ச்சி வகுதியைச் சேர்ந்த படகோட்டுநர் பதவிக்குரிய ஊழியர்களின் சேவைப்பிரமாணக் குறிப்பு எனவாகும்.

ii. **"ஆணைக்குழு"** என்ற கலைச் சொல்லால் கருதவேண்டியது வட மாகாணத்தின் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு எனவாகும்.

iii. **"நியமன அதிகாரி"** என்ற கலைச்சொல்லால் கருதவேண்டியது வட மாகாண ஆளுநரால் நியமன அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்ட அதிகாரி எனவாகும்.

iv. **"சேவை"** என்ற கலைச்சொல்லால் கருதவேண்டியது வட மாகாண சுகாதார அமைச்சின் கீழான ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதியினருக்கான சேவை.

v. **"திருப்திகரமான சேவைக்காலம்"** என்ற கலைச்சொல்லால் கருதப்படுவது ஒரு அரசாங்க உத்தியோகத்தர் வினைத்திறமை மற்றும் ஊக்கம் மற்றும் சுறுசுறுப்புடன் தனது கடமைகளை நிறைவேற்றியதன் மூலம் மற்றும் குறிக்கப்பட்ட திகதிகளில் தனக்குரிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளில் சித்தியடைந்ததன் மூலம் மற்றும் எந்த தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களையும் செய்யாததன் மூலம் தனக்குரிய எல்லாச் சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ள காலப்பகுதி எனவாகும்.

vi. **"சம்பள ஏற்றம்"** என்ற கலைச்சொல்லால் கருதப்படுவது ஒரு அரசாங்க உத்தியோகத்தர் வினைத்திறமை, ஊக்கம் மற்றும் சுறுசுறுப்புடன் தனது சம்பள ஏற்றக்காலப் பகுதியினுள் முழுமையாகப் பணியாற்றுவதன் மூலம் நிதி ரீதியான பயனுடன் உழைத்துப் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பள உயர்ச்சி.

vii. **"செயல்திறன் சேவை"** என்ற கலைச்சொல்லால் கருதப்படுவது கடமைகளில் தன்னை உண்மையாக ஈடுபடுத்தித் தனது பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்றுக்கொண்ட காலப்பகுதி எனவாகும். அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிரசவ விடுமுறை தவிர சம்பளமற்ற எல்லாக் காலப் பகுதிகளும் செயல்திறன் சேவைக்கால நோக்கத்துக்காகக் கணக்கிடப்படமாட்டாது.

### 02. நியமன அதிகாரி

ஆளுநர் குறிப்பாணை 2013/01 மற்றும் அதன் பிற்பட்ட திருத்தங்களின்படி, வட மாகாண ஆளுநரால் நியமன அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்ட அதிகாரி.

### 03. சேவை வகுதி பற்றிய விபரங்கள்

3.1. **சேவை வகுதி:** ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதியினருக்கான சேவை

3.2. **தரங்கள்:** தரம் III, தரம் II, தரம் I மற்றும் விசேடதரம்

3.3. **ஒப்படைக்கப்படும் பொறுப்புக்கள் தொடர்பான பொதுவான வரைவிலக்கணம்:**

சுகாதார நிறுவனங்களில் நிறைவேற்று மற்றும் நிர்வாக மட்டங்களில் உள்ளவர்களின் கடமைகளின் தாழ்நிலை மற்றும் எளிதாக்கல் செய்பணிகளுக்கு இடையில், ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதியினருக்கான தனி செயல்புரி கடமைகள் இந்த சேவைத் தொகுதிக்கு ஒப்படைக்கப்படும். இந்தத் தொகுதியின் கடமைகளுக்கு

இடையில் நியமன அதிகாரியால் விசேடமாகக் காட்டப்பட்டுக் கட்டளை இடப்பட்ட கடமைகள் இந்த உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்படல் வேண்டும்.

3.4. கடமைகளை ஒப்படைத்தல்:

தர ரீதியான செயற்பாடுகள் ஒப்படைக்கப்படாத அதே சமயம், இந்தச் சேவைத் தொகுதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கிடையில், சேவைத் தேவைப்பாட்டுக்கு அமைய, எந்த தரத்தின் உத்தியோகத்தருக்கும், எந்தச் செயற்பாடும், சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்பட முடியும்.

## 04. பதவியின் தன்மை: நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடனானதும்

## 05. சம்பளம்:

5.1 சம்பளக் குறியீடு: PL-2-2006A

5.2. சம்பள அளவுத்திட்டம்: ரூபா. 12,210 - 10x130 - 10x145 - 10x160 - 12x170 - 18,600

5.3. தர முறைமைக்கு உரியதான சம்பளப் படிநிலைகள்

| தரம் | சம்பளப் படிநிலை | தர நிலைக்குரியதான ஆரம்ப சம்பளம் (ரூபா) |
|---|---|---|
| III | ஆரம்ப படிநிலை | 12,210/- |
| II | படிநிலை – 12 | 13,655/- |
| I | படிநிலை – 22 | 15,120/- |
| விசேடதரம் | படிநிலை – 32 | 16,730/- |

5.4. பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006(IV) இற்கு அமைய இக்குறித்த சம்பளம் அமையும்

## 06. பதவி விபரம்:

பதவியின் அங்கீகரிக்கப்பட்ட பெயர், அங்கீகரிக்கப்பட்ட ஆளணி, மற்றும் ஒப்படைக்கப்பட்ட கடமைகள்

| தொடர் இல | அங்கீகரிக்கப்பட்ட பதவிப்பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பதவிக்கான தரம் | ஆங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை | கடமைகள் |
|---|---|---|---|---|
| 01 | படகோட்டுநர் (Boatman) | III, II, I மற்றும் விசேட தரம் | 02 | பொதுவான கடமைகள் *இணைப்பு - 01* இன் படி |

குறிப்பு:- தரப் பதவி உயர்வு நோக்கத்துக்காக, தரம் III, II, I மற்றும் விசேட தரம் ஆகியன இணைந்த ஆளணியாகக் கருதப்படும்.

## 07. இப்பதவிக்கான நியதிகளும் நிபந்தனைகளும்

7.1. திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தரம் IIIஇற்கு உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்க்கப்பட்டால் மூன்று வருடங்களான தகுதிகாண் காலத்துக்கு உட்படுத்தப்படல் வேண்டும். உத்தியோகத்தர் முதலாவது வினைத் திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தி அடைந்துள்ளார் எனத் திணைக்களத் தலைவர் தான் திருதிப்பட்டால் மற்றும் உத்தியோகத்தரின் வேலை, நடத்தை மற்றும் வரவு திருப்திகரமானால், மூன்று வருட முடிவில் அது நியமன அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட வேண்டியதுடன், மற்றும் பின்னர் நியமன அதிகாரி இது தொடர்பாகத் திருப்தியடைந்தால் உத்தியோகத்தரின் நியமனம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.2. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் தரம் IIIஇற்கு ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தரொருவர் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருட பரீட்சார்த்த காலத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். பரீட்சார்த்த காலத்தில் உத்தியோகத்தருடைய வேலை, நடத்தை மற்றும் வரவு திருப்திகரமானது என நியமன அதிகாரி திருப்திப்பட்டால், உத்தியோகத்தரின் நியமனம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.3. விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு அல்லது தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பொருத்தமானதாக, உத்தியோகத்தர் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

7.4. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1837/30 இலக்க 2013.07.03ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறைக்கான ஒழுங்குவிதிக்கோவையில் காட்டப்பட்ட பொது நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் ஒவ்வொரு நியமனத்துக்காகவும் பொருத்தமாகும்.

7.5. மாகாண நிதிப் பிரமாணங்கள், தாபனக்கோவை, திணைக்கள விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் அரசாங்கம், மாகாண சபை, கௌரவ ஆளுநர் மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளரால் காலத்துக்குக் காலம் வழங்கப்படக்கூடிய ஏனைய விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு உத்தியோகத்தர் உட்பட்டவராதல் வேண்டும்.

## 08. ஆட்சேர்ப்பு முறைமை:

8.1. ஆட்சேர்ப்பு வீதம் :

| தொடர் இல | அங்கீகரிக்கப்பட்ட பதவியின் பெயர் | ஆட்சேர்ப்பு வகை | வீதம் |
|---|---|---|---|
| 01 | படகோட்டுநர் (Boatman) | மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு | 100% |

குறிப்பு:- மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கு போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாவிடின் சேவையின் அவசியம் கருதி 100% திறந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படும்.

8.2. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு

8.2.1. ஆட்சேர்ப்பு தரம் : தரம் III

8.2.2. ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்

8.2.2.1. கல்வித்தகைமை:

8.2.2.2. ஏனைய தகைமைகள்:

} *இணைப்பு - 02* ஐ பார்க்கவும்

8.2.2.3. வயது: பொருத்தமானதல்ல

8.2.2.4. பௌதிகத் தகுதி:

வட மாகாணத்தின் எந்தப் பகுதியிலும் குறிப்பாக கடல்சார் பகுதியில் சேவை செய்வதற்கு உடல் மற்றும் உள ரீதியாகத் தகுதியாய் இருக்கவேண்டியதுடன், பதவிக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலுமாயிருக்கவேண்டும்.

8.2.3. ஆட்சேர்ப்பு முறை: கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை - *இணைப்பு - 03*

8.2.4. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை சபையை நியமிக்கும் அதிகாரி:

செயலாளர், மாகாண சுகாதார அமைச்சு, வட மாகாணம்

8.2.5. விண்ணப்பங்கள் கோரும் முறை:

உள்ளக சுற்றுநிருபங்கள் மற்றும் வடக்கு மாகாண சபையின் இணையத் தளத்தில் பிரசுரிப்பதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

8.2.6. தெரிவு செய்யும் முறை:

விண்ணப்பங்கள் கோரும் நேரத்தில் இருக்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஆட்சேர்ப்பு எண்ணிக்கை தீர்மானிக்கப்படுவதுடன் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை ஒழுங்கு (Merit) அடிப்படையில் மட்டுமே நியமனங்கள் செய்யப்படும்.

8.3. திறந்த ஆட்சேர்ப்பு (மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில்)

8.3.1. ஆட்சேர்ப்பு தரம்:- தரம் III

8.3.2. தகைமைகள்

8.3.2.1. கல்வி மற்று ஏனைய தகைமைகள்: *இணைப்பு 04* ஐ பார்க்கவும்

8.3.2.2. பௌதிக தகைமைகள்:

வடக்கு மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு மற்றும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராயிருக்க வேண்டும்.

8.3.2.3. ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தேவைப்பாடுகள்:

i. ஒரு இலங்கைப் பிரஜையாயிருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முந்தியதான ஆறு (06) வருடங்களுள், வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியான மூன்று (03) வருடங்களான நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருந்திருத்தல் வேண்டும். (நிரந்தர வதிவிடத்தை நிரூபிப்பதற்கு வாக்காளர் பட்டியலைச் சமர்ப்பித்தல் வேண்டும்)

**அல்லது**

விண்ணப்பதாரர் அல்லது அவரின் பெற்றோர் வடக்கு மாகாணத்தில் பிறந்திருக்க வேண்டியதுடன், வடக்கு மாகாணத்தில் ஆகக் குறைந்ததாக ஐந்து வருடங்களான தொடர்ச்சியான நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருந்திருத்தல் வேண்டும். (நிரந்தர வதிவிடத்தை நிரூபிப்பதற்கு வாக்காளர் பட்டியலைச் சமர்ப்பித்தல் வேண்டும்)

iii. இப்பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான 8.3.2 மற்றும் 8.3.3 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளை ஒவ்வொரு விதத்திலும், அறிவித்தல் / வர்த்தமானப் பத்திரிகையில் குறித்துரைக்கப்பட்ட திகதியில் திருப்திப்படுத்தி இருக்கவேண்டும்.

8.3.3. வயது:

8.3.3.1. ஆகக்குறைந்த வயதெல்லை: 18 வருடங்களுக்கு மேற்பட்டிருத்தல்

8.3.3.2. ஆகக்கூடிய வயதெல்லை: 30 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல்

8.3.4. ஆட்சேர்ப்பு முறை: எழுத்துப்பரீட்சை - *இணைப்பு 05* ஐ பார்க்கவும்

8.3.5. பரீட்சையை நடாத்தும் அதிகாரம்:

செயலாளர்,மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடமாகாணம்

8.3.6. பொது நேர்முகப் பரீட்சை: அபேட்சகரின் தகுதி மற்றும் தகைமைகள் நேர்முகப் பரீட்சை சபையால் பரிசீலிக்கப்படும்.

8.3.7. தெரிவு செய்யும் முறை:

விண்ணப்பங்கள் கோரும் நேரத்தில் இருக்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஆட்சேர்ப்பு எண்ணிக்கை தீர்மானிக்கப்படுவதுடன் தேவையான தகுதிகளை பூர்த்திசெய்துள்ளவர்களிலின் பட்டியல் தயாரிக்கப்பட்டு அவர்கள்

எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை ஒழுங்கு (Merit) அடிப்படையில் மட்டுமே நியமனங்கள் செய்யப்படும்.

8.3.8. விண்ணப்பங்கள் கோரும் முறை:

உள்ளூர் செய்திப் பத்திரிகைகள் மற்றும் வடக்கு மாகாண சபையின் இணையத் தளத்தில் பிரசுரிப்பதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

## 09. வினைத்திறமைகாண் தடை

9.1. வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளின் விபரங்கள்

| வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை விபரம் | வினைத்திறமைகாண் தடை சித்தியடைய வேண்டிய விபரம் | வினைத்திறமைகாண் தடையின் தன்மை எழுத்துப் பரீட்சை/ தொழில் பரீட்சை/ சான்றிதழ் பாடநெறி/ ஏனையவை |
|---|---|---|
| 1வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை | தரம் IIIக்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவு செய்வதற்கு முன் | வாய்மொழி பரீட்சை (இணைப்பு 06) |
| 2வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை | தரம் IIக்கு பதவியுயர்த்தப்பட்டு 03 வருடங்கள் நிறைவு செய்வதற்கு முன் | வாய்மொழி பரீட்சை (இணைப்பு 07) |
| 3வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை | தரம் Iக்கு பதவியுயர்த்தப்பட்டு 05 வருடங்கள் நிறைவு செய்வதற்கு முன் | வாய்மொழி பரீட்சை (இணைப்பு 08) |

9.2. வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நடக்கும் காலப்பகுதி :ஒரு வருடத்துக்கு இரு தடவைகள்

9.3. வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நடத்தும் அதிகாரி:
செயலாளர், மாகாண சுகாதார அமைச்சு வட மாகாணம்

## 10. மொழித் தேர்ச்சி:

| மொழித் தேர்ச்சி | பெற்றுக்கொள்ள வேண்டிய மொழித் தேர்ச்சி |
|---|---|
| 01. அரச கரும மொழி | அரச கரும மொழிகள் அல்லாத மொழி மூலத்தில் சேவைக்கு இணைந்த உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலத்தில் அரச கரும மொழிகளில் ஆகக் குறைந்ததாக ஒரு அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| 02. மற்றைய அரச கரும மொழி | பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 மற்றும் அதற்குப் பிற்பட்டதான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப மற்றைய அரச கரும மொழியில் உரிய மட்ட மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 11. தரங்களுக்குப் பதவி உயர்த்துதல்

11.1. தரம் III இல் இருந்து தரம் II க்குப் பதவி உயர்த்துதல்

11.1.1. சாதாரண நிறைவேற்றுகையின் மீது பூர்த்தி செய்யவேண்டிய தகைமைகள்:

i) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தல் வேண்டும்

ii) சேவையின் தரம் III இல் ஆகக் குறைந்தது பத்து(10) வருடங்களான செயல்திறன் மற்றும் திருப்திகரமான சேவையைப் பூரணப்படுத்துதல் மற்றும் பத்து(10) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.

iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின்படி பதவி உயர்வுத் திகதிக்கு முன் ஐந்து(5) வருட காலப்பகுதியில் தொடர்ச்சியான, திருப்திகரமான அல்லது அதற்கு உயர் செயலாற்றுகையைக் காட்டியிருத்தல்.

iv) உரிய மட்டத்தில் மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.

v) குறித்த திகதியில் உரிய வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

11.1.2. பதவி உயர்த்தும் முறை:

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களால் பொருத்தமான படிவத்தில் (GP/G/1) நியமன அதிகாரிக்குக் கோரிக்கை செய்யப்பட்டவிடத்து, தகைமைகளைப் பரிசோதனை செய்ததன் பின், தகைமை பெறும் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் தரம் II இற்கான பதவி உயர்வை நியமன அதிகாரி மேற்கொள்ளுவார்.

11.2. தரம் II இல் இருந்து தரம் I க்குப் பதவி உயர்த்துதல்

11.2.1. சாதாரண நிறைவேற்றுகையின் மீது பூர்த்தி செய்யவேண்டிய தகைமைகள்:

i) சேவையின் தரம் II இல் ஆகக் குறைந்தது ஒன்பது(9) வருடங்களான செயல்திறன் மற்றும் திருப்திகரமான சேவையைப் பூரணப்படுத்துதல் மற்றும் ஒன்பது(9) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.

ii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின்படி பதவி உயர்வுத் திகதிக்கு முன் ஐந்து(5) வருட காலப்பகுதியில் தொடர்ச்சியான, திருப்திகரமான அல்லது அதற்கு உயர் செயலாற்றுகையைக் காட்டியிருத்தல்.

iii) குறித்த திகதியில் உரிய வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

11.2.2. பதவி உயர்த்தும் முறை:

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களால் பொருத்தமான படிவத்தில் (GP/G/1) நியமன அதிகாரிக்குக் கோரிக்கை செய்யப்பட்டவிடத்து, தகைமைகளைப் பரிசோதனை செய்ததன் பின், தகைமை பெறும் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தரம் I இற்கான பதவி உயர்வை நியமன அதிகாரி மேற்கொள்ளுவார்.

11.3. தரம் I இல் இருந்து விசேட தரத்திற்கு பதவி உயர்த்துதல்

11.3.1. சாதாரண நிறைவேற்றுகையின் மீது பூர்த்தி செய்யவேண்டிய தகைமைகள்:

i) சேவையின் தரம் I இல் ஆகக் குறைந்தது ஒன்பது(9) வருடங்களான செயல்திறன் மற்றும் திருப்திகரமான சேவையைப் பூரணப்படுத்துதல் மற்றும் ஒன்பது(9) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.

ii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின்படி பதவி உயர்வுத் திகதிக்கு முன் ஐந்து(5) வருட காலப்பகுதியில் தொடர்ச்சியான, திருப்திகரமான அல்லது அதற்கு உயர் செயலாற்றுகையைக் காட்டியிருத்தல்.

iii) குறித்த திகதியில் உரிய வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

11.3.2. பதவி உயர்த்தும் முறை:

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களால் பொருத்தமான படிவத்தில் (GP/G/1) நியமன அதிகாரிக்குக் கோரிக்கை செய்யப்பட்டவிடத்து, தகைமைகளைப் பரிசோதனை செய்ததன் பின், தகைமை பெறும் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விசேட தரத்திற்கான பதவி உயர்வை நியமன அதிகாரி மேற்கொள்ளுவார்.

12. மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையில் தரப்பட்டுள்ள பொது நிபந்தனைகளுக்கு புறம்பான விதிகள்.

இந்தச் சேவைத் தொகுதிக்குச் செய்யப்பட்ட எல்லா நியமனங்கள்/ ஆட்சேர்ப்புகளும் இந்த ஆட்சேர்ப்புதிட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுக்குக்கமைய இணங்கியதாதல் வேண்டும்.
இச் சேவைப்பிரமாண குறிப்பின் மொழி பெயர்ப்புக்களில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படுமாயின் தமிழ் மொழி மூலமான ஏற்பாடுகளே மேலோங்கும்

**13. ஏற்கனவே சேவையில் ஈடுபட்டுள்ளவர்களை இச்சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய உள்ளீர்த்தல்.**

13.1. இவ் சேவைப்பிரமாணக்குறிப்பு நடைமுறைக்குவரும் திகதியில், பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006(IV) இன் கீழ் சம்பளம் பெறும் ஆரம்ப மட்ட பகுதித்தேர்ச்சி வகுதியைசேர்ந்த படகோட்டுனர் பதவியிலுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும், இச் சேவைப்பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில் PL-2-2006A சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் தரம் III இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவார்கள்.

13.2. தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 4:3 பிரிவிலுள்ள சம்பள மாற்ற ஏற்பாடுகளுக்கு உட்பட்டு உள்ளீர்ப்புச்செய்யப்படுபவர்களின் சம்பள மாற்றம் மேற்கொள்ளப்படுமாயினும் அவர்கள் இறுதியாகப் பெற்றுக் கொண்டிருந்த சம்பளப் படிநிலை புதிய சம்பளப் படிநிலைக்கு நேரொத்ததாயின் பிரிவு 4.4 ஏற்பாடுகளுக்கு அமைய அடுத்த உயர்படிநிலையில் வைத்தலாகாது.

13.3. உள்ளீர்ப்புச் செய்யப்படுபவர்களது நியமனத் திகதியின் அடிப்படையில் அவரவர் சேவைக்காலம் கணக்கிடப்படல் வேண்டும். எவ்வாறெனினும், உள்ளீர்ப்பால் சம்பந்தப்பட்டவருடைய சம்பள ஏற்றத் திகதியில் மாற்றம் நேரிடக்கூடாததுடன் அந்தத் திகதி மாற்றமின்றி, உள்ளீர்ப்புக்கு முன்பு இருந்த திகதியாக நடைமுறையாதல் வேண்டும்.

**14. இடைக்கால ஏற்பாடுகள்**

14.1. இச் சேவைப்பிரமாணக் குறிப்பிற்கிணங்க தரம் IIIஇற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் தமக்குரிய 1ம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டிய காலம், வட மாகாண ஆளுநரால் இச்சேவைப்பிரமாணக் குறிப்பு அங்கீகரிக்கப்படும் திகதியிருந்து மூன்று வருடங்களாக கணிப்பிடப்படும்

14.2. இச் சேவைப்பிரமாணக் குறிப்பிற்கிணங்க தரம் IIIஇற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள், கீழ்குறித்த நிபந்தனைகளை பூர்த்தி செய்திருக்கும் பட்சத்தில் தரம் II இற்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.

i) சேவையின் தரம் III இல் ஆகக் குறைந்தது மூன்று(03) வருடங்கள் செயற்திறன் மற்றும் திருப்பிகரமான சேவைக்காலத்தை பூர்த்திசெய்து மூன்று(03) சம்பள ஏற்றங்களை பெற்றிருத்தல் வேண்டும்.

ii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின் படி பதவியுயர்வு திகதிக்கு உடன் முன்னரான மூன்று(03) வருடங்கள் திருப்பிகரமான அல்லது உயர்வான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

iii) குறித்த திகதியில் உரிய வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

iv) குறித்த திகதியில் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

14.3 இவ் இடைக்கால ஏற்பாடுகள் 01.01.2013த் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்றவர்களுக்கு மட்டுமே ஏற்புடையதாகும்

15. கட்டுப்பாடு:

இப்பதவி மற்றும் இப்பதவிக்குரிய சேவையானது வட மாகாண ஆளுநருடைய கட்டுப்பாட்டின்கீழ் இருத்தல் வேண்டும்.

16. ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள்

இச் சேவைப்பிரமாணக் குறிப்பில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் வட மாகாண ஆளுநரால் தீர்மானிக்கப்படும்.

தயாரித்தவர்: V. Sujitha
(விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் கையொப்பம்)

பெயர்: வ. சுஜித்திரா

பதவி: அபிவிருத்தி உத்தியோகத்தர்

திகதி: 24.02.2023

சரிபார்த்தவர்: ..................
(விடயத்திற்குப் பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தரின் கையொப்பம்)

பெயர்: ச. பிரசாத்

பதவி: நிர்வாக உத்தியோகத்தர்
சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு
வடக்கு மாகாணம்

திகதி: ..................

தொடர்பு இலக்கம்: ....................................

வட மாகாண சுகாதார அமைச்சின் ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதியின் (PL- 2-2006A) படகோட்டுநர் (Boatman) பதவிக்காக முன்மொழியப்பட்டுள்ள இச் சேவைப்பிரமாணக் குறிப்பை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

திகதி : 24/02/2022

..........................
(அமைச்சு செயலாளரின் கையொப்பமும் பதவி முத்திரையும்)
திருமதி.ச.மோகநாதன்,
செயலாளர்,
மாகாண சுகாதார அமைச்சு,
வட மாகாணம்.

திருமதி. ச. மோகநாதன்
செயலாளர்
சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு
வடக்கு மாகாணம்

தொடர்பு இலக்கம்: NP/01/02/03/Ser. Min/Health

வட மாகாண சுகாதார அமைச்சின் ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதியின் (PL- 2-2006A) படகோட்டுநர் (Boatman) பதவிக்காக முன்மொழியப்பட்டுள்ள இச் சேவைப்பிரமாணக் குறிப்பை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

திகதி : 22/3/2023

..........................
(பிரதம செயலாளரின் கையொப்பமும் பதவி முத்திரையும்)
திரு.எஸ்.எம்.சமன் பந்துலசேன,
பிரதம செயலாளர்,
வட மாகாணம்.

S.M. Saman Bandulasena
Chief Secretary
Northern Province

வட மாகாணம்.

வட மாகாண சுகாதார அமைச்சின் ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதியின் (PL- 2-2006A) படகோட்டுநர் (Boatman) பதவிக்காக முன்மொழியப்பட்டுள்ள இச் சேவைப்பிரமாணக் குறிப்பு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டு வட மாகாண ஆளுநரின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

திகதி : ……………

…………………………..
(செயலாளரின் கையொப்பமும் பதவி முத்திரையும்)
திரு.எஸ்.திருவாகரன்,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வட மாகாணம்.

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வட மாகாணம்

அங்கீகரிக்கப்பட்டது.

திகதி : 11.09.2023

…………………………..
(கையொப்பமும் பதவி முத்திரையும்)
கௌரவ.பீ.எஸ்.எம்.சார்ள்ஸ்,
ஆளுநர்,
வட மாகாணம்.

P. S. M. Charles
Governor
Northern Province

## படகோட்டுநர் (Boatman) பதவியணியினருக்கான கடமைகள்

1. நோயாளர் காவு படகுக்குரிய பொருட்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொண்டு காலத்துக்குக் காலம் நிறுவனத்தலைவர் மற்றும் அவரால் பணிக்கப்படும் உத்தியோகர்களுக்கு காண்பிப்பதுடன் வருடாந்த இருப்பு கணிப்பீட்டு நடவடிக்கைக்கு உரிய காலத்தில் சமப்படுத்தி பொருட்பதிவேட்டை கணிப்பீட்டுச்சபை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்
2. நிறுவனத்தலைவர்களின் அறிவுறுத்தலின் படி நோயாளர்களை பொறுப்பேற்கும் துறையில் இருந்து ஒப்படைக்கும் துறைவரை முறையான விதத்தில் மற்றும் பாதுகாப்புடன் பயணம் செய்தல்.
3. அவ்சர நோயாளியொருவர் அல்லது சாதாரண நோயாளியொருவர இடமாற்றம் செய்கையில் வைத்தியரால் வழங்கப்படும் இடமாற்ற படிவத்தை பார்த்து அதில் குறிப்பிடப்பட்ட நோய் நிலையின் கீழ் முறையாக நோயாளா் காவு படகுகளை செலுத்துவதற்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளார்
4. நோயாளர் காவு படகினை செலுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு உடையை படகு ஓட்டுனர், உதவியாளர்கள் மற்றும் அலுவலர் குழாம் அணிந்திருப்பை உறுதிப்படுத்த படகு ஓட்டுனர் கடமைப்பட்டுள்ளார்
5. நோயாளர்களை நோயாளர் காவு படகுக்கு ஏற்றுகையில் மற்றும் வெளியே கொண்டுவருகையில் மிகவும் பாதுகாப்பாக நடுநிலைமை அமைதியாக (Equilibrium) மற்றும் தேவையற்ற குழப்பங்கள் இன்றிச் செயல்படுவதற்கு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
6. நோயாளருக்கு பண்புள்ளவராய் இருக்க வேண்டும் என்பதுடன் ஊனமுற்ற நோயாளர்கள், கா்ப்பிணித்தாய்மார், எலும்பு துண்டித்த நோயாளர்கள், முதுகெலும்பு மற்றும் அதில் நோய் நிலைமைகள் உள்ள நோயாளர்கள் , சுவாச அசௌகரியமுள்ள நோயாளர்கள், குருதி கசிவதான நோயாளர்கள், சிறுகுழந்தைகள், இருதய பாதிப்பு நோயாளர்கள் போக்குவரத்தில் கூடிய கவனத்தில் அந்த நோயாளிகளுக்கு உதவி வழங்குவதுடன் தமது வசதியல்லாது நோயாளியுடைய வசதி தொடர்பாக உறுதியாக செயற்பட கடமைப்பட்டுள்ளார்.
7. வைத்திய உத்தியோகத்தருடைய அறிவுறுத்தலின்படி குறித்த நேரத்திற்கு நோயாளியை கொண்டு செல்வதை உறுதிப்படுத்துவதுடன் நோயாளியொருவா் இருக்கும் சந்தர்ப்பத்தில் அவசர அபாய விளக்கு மூலம் அதனை தெரிவிக்க வேண்டியதுடன் நோயாளியின் நோய் நிலைமைகள் மற்றும் மருத்துவ அறிவுறுத்தல்களை கவனத்தில் கொண்டு சைரன் (Siren) குழலை ஒலிக்கவிட வேண்டும்
8. மன நோயாளர்கள் போக்குவரத்தில் தீவிர கவனம் காட்ட வேண்டியதுடன் மிகவும் பாதுகாப்பாக போக்குவரத்து செய்யவேண்டும்.
9. தாம் கொண்டு செல்லும் நோயாளி மரணமடைந்த சந்தர்ப்பத்தில் கடமைப்பொறுப்பு வைத்திய உத்தியோகத்தர், நிறுவனத்தலைவருக்கு அந்த சந்தர்ப்பத்தை அறியத்தந்து அவர்களின் அறிவுறுத்தலின்படி செயற்படுவதை உறுதிப்படுத்திக்கொள்வதுடன் மேலும் நோயாளர்கள் இருப்பின் அந்த நோயளர்களுடைய இடமாற்றப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள மருத்துவ அறிவுறுத்தலின்படி விரைவாக அந்த நோயாளர்களை உரிய முறையில் ஒப்படைத்தல் வேண்டும்.
10. நாட்டின் அவசர சந்தர்ப்பங்களில் அல்லது விசேட சந்தர்ப்பங்களில் நிறுவனத் தலைவர்களுடைய கட்டளையின்படி நோயாளர் காவு படகுகளை அவ்வித சந்தர்ப்பங்களுக்குச் சேவையில் ஈடுபடுத்துவதற்காக படகு ஓட்டுனர் கடமைப்பட்டுள்ளார்.

11. நோயாளர் காவு படகின் நாளாந்த ஒட்டப்புத்தகங்களை நிறுவனப் பொறுப்பு வைத்திய உத்தியோகத்தர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரைக்கொண்டு கையொப்பம் இடுவித்துக் கொள்ள வேண்டும்

12. நோயாளர்கள் காவு படகிலுள்ள மருத்துவ உபகரணங்களின் பொருட்பதிவேடின் (Inventory) பிரகாரம் பாரம் எடுக்க வேண்டியதுடன் நாளாந்தம் காலையில் அவற்றை பரிசோதித்து இயங்கு நிலையில் இருக்கின்றனவா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டியதுடன் நோயாளர் காவு படகுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள உதவியாளர்களுடைய சேவைகளைப் பரிசோதித்து முறையான விதத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கு கடமைப்பட்டு இருக்கின்றனர் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்

13. நோயாளர் காவு படகிற்கு இணைக்கப்பட்டுள்ள ஏனைய பணியாளர் குழாம் சீருடை மற்றும் கடற்பாதுகாப்பு அங்கிகள் அணிந்திருப்பதை உறுதிப்படுத்துவதுடன் சிகரட் மதுபானம் பாவித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த கடமைப்பட்டுள்ளார்.

14. தமது கடமைநேரம் முடிந்ததும் நோயாளர் காவு படகிற்கு இணைக்கப்பட்டுள்ள மற்றைய படகோட்டுனரொருவர் வருகை தந்திராத சந்தர்ப்பங்களில் நோயாளர் காவு படகு சேவையிலிருந்து விலகிச் செல்லக்கூடாது.

15. நோயாளர் காவு படகின் முதலுதவிப்பெட்டி மருந்துப்பொருட்கள் எந்த நேரத்திலும் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்தல்

16. தொற்று நோயாளியொருவரின் போக்குவரத்தின் பின் பொதுச் சுகாதார பரிசோதகர் அல்லது பயிற்சி தொற்றுக் கட்டுப்பாட்டு (Infection Control) உத்தியோகத்தருடைய அறிவுறுத்தலின்படி உதவியாளரூடாக நோயாளர் காவு படகு தொற்று நீக்கப்பட்டு கழுவித் துப்பரவுவாக்கப்படவேண்டும்

17. நோயாளர் காவு படகிற்கு நேர காலத்துடன் எரிபொருள் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் நோயாளர்களை போக்குவரத்து செய்யும் போது எரிபொருள் நிரப்புதல் செய்யக்கூடாது

18. எரிபொருள் சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள சகல கட்டளைச் சட்டங்கள் மற்றும் எரிபொருள் சம்பந்தமாக பூரணமான பொறுப்பு வகிக்க வேண்டும்.

19. நோயாளர் காவு படகில் வெளி ஆட்கள் போக்குவரத்துச் செய்தல் பூரணமான தடையாகும் இவ்வாறு போக்குவரத்துச் செய்கையில் ஏற்படும் எதும் பிரச்சனைகளில் படகு ஓட்டுனர் இது சம்பந்தமாக பூரணமான பொறுப்பை ஏற்கவேண்டும்.

20. படகு ஓட்டுநர் சம்பந்தமாக வழங்கப்படும் பயிற்சிகளில் பங்குபற்ற வேண்டும்

21. நோயாளர் காவு படகின் போக்குவரத்தின் போது விபத்து ஏற்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத்தலைவரின் அறிவுறுத்தலைப் பெற்று அதன்படி விரைவாக செயற்படுவதுடன் போக்குவரத்து செய்கின்ற நோயாளி சம்பந்தமாகத் தீவிர மிகுந்த நோக்கத்துடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

22. நோயாளர் காவு படகிற்கு இணைந்த படகுஓட்டுனர்கள் நேரடியாக போக்குவரத்துச் சம்பந்தமுடையவர்களானதால் மிகவும் பாதுகாப்பாக முறையான கவனிப்பில் மற்றும் அர்ப்பணிப்பில் நிறுவனத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கும் விதத்தில் தமது சேவையை நிறைவேற்றுவதற்கு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

23. சுகாதார அமைச்சினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் சாரதிகளுக்கான கடமைப்பட்டியலின் பிரகாரம் பொருத்தமான கடமைகள் படகோட்டுனர்களுக்கும் உள்ளடக்கப்படும்

## வட மாகாண சுகாதார அமைச்சின் கீழான திணைக்கள சேவையின் ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதிக்குரிய படகோட்டுநர் பதவிக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்குரிய தகைமைகள்

| கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்: |
|---|
| 1. கல்வித்தகைமைகள்:<br>தமிழ் / சிங்களம் மற்றும் கணிதத்துடன் ஏனைய இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஒரே தடவையில் ஆறு(06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்.<br><br>2. தொழில்சார் தகைமைகள்:<br>அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் படகோட்டுநருக்கான வலுவிலுள்ள தகுதிச்சான்றிதழை பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>3. ஏனைய தகைமைகள்:<br>i) மாகாண சுகாதார அமைச்சின் கீழான திணைக்கள சேவையின் ஆரம்ப மட்ட வகுதியைச் சேர்ந்த அலுவலராக இருத்தல் வேண்டும்.<br>ii) ஆரம்பமட்ட தேர்ச்சியற்ற வகுதியில் (PL-1) தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான 05 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அல்லது ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதியில் (PL-2) மூன்று(03) வருட தொடர்ச்சியான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். வேதன ஏற்றம் உழைத்துப்பெற்றிருத்தல் வேண்டும்<br>iii) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தலுடன் உரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்<br><br>4. விண்ணப்பபங்கள் கோரப்படும் திகதியில் குறித்த பதவிக்குரிய தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |

## வட மாகாண சுகாதார அமைச்சின் கீழான திணைக்கள சேவையின் ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதிக்குரிய படகோட்டுநர் பதவிக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்குரிய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

01. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையை நடத்தும் அதிகாரி:
    செயலாளர், மாகண சுகாதார அமைச்சு, வடக்கு மாகாணம்

02. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீசைக்கான புள்ளியிடும் திட்டம்:

| தொ. இல. | புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள் | | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **சேவையின் முதுமுறை அடிப்படை** | | 50 |
| | i) செயற்திறன் மற்றும் திருப்திகரமான வேைக்காலத்தை பூர்த்திசெய்துள்ள ஒவ்வொரு வருடத்திற்கும் | - 05 புள்ளிகள் | |
| | ii) 06 மாதங்கள் அல்லது அற்கு கூடுதலான ஆனால் 12 மாதங்களுக்கு குறைந்த சேவைக்காலத்திற்கு | - 03 புள்ளிகள் | |
| 02 | **தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகளுக்கு கூடுதலான கல்வித் தகைமைகளுக்கான புள்ளிகள்** | | 25 |
| | i) க.பொ.த(உ/த) தகைமை அல்லது ஏனைய ஏதும் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் ஆறுமாதத்திற்கு குறையாத டிப்ளோமா தகைமைகளை பரீட்சார்த்தி கொண்டிருந்தால் | - 25 புள்ளிகள் | |
| | அல்லது | | |
| | ii) மேலதிகமான ஒவ்வொரு திறமைச்சித்திக்கு அல்லது திறமைச்சித்திக்கு மேல் | - 05 புள்ளிகள் | |
| | iii) மேலதிகமான ஒவ்வாரு சாதாரண சித்திக்கும் | - 03 புள்ளிகள் | |
| 03 | பதவிக்கு உரியதான அடிப்படை தொழில் தகைமைக்கு மேலதிகமான தெடர்புபட்ட தகைமைகள் | | 10 |
| 04 | பதவிக்கு உரியதான அறிவும் திறமையும் (Khowldge & Skills) | | 10 |
| 05 | நேர்முகப் பரீட்சையில் காட்டிய செயற்திறன் (Performance) | | 05 |
| | **மொத்த புள்ளிகள்** | | **100** |

# வட மாகாண சுகாதார அமைச்சின் கீழான திணைக்கள சேவையின் ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதிக்குரிய படகோட்டுநர் பதவிக்கான திறந்த ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்

| கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்: |
|---|
| 1. கல்வித்தகைமைகள்:<br>தமிழ் / சிங்களம் மற்றும் கணிதத்துடன் ஏனைய இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஒரே தடவையில் ஆறு(06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.<br><br>2. தொழில்சார் தகைமைகள்:<br>அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் படகோட்டுநருக்கான வலுவிலுள்ள தகுதிச்சான்றிதழை பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>3. விண்ணப்பபங்கள் கோரப்படும் திகதியில் குறித்த பதவிக்குரிய தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |

## வட மாகாண சுகாதார அமைச்சின் கீழான திணைக்கள சேவையின் ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதிக்குரிய படகோட்டுநர் பதவிக்கான திறந்த ஆட்சேர்ப்புக்கான எழுத்துப்பரீட்சை

01. எழுத்துப்பரீட்சையின் விபரங்கள்:

| வினாத்தாள் | காலம் | உச்சப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 02. நுண்ணறிவுப் பரீட்சை | 01 ½ மணித்தியாலம் | 100 | 40% |

02. பரீட்சையை நடத்தும் அதிகாரம்:

செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடமாகாணம்

03. எழுத்துப்பரீட்சைக்கான பாடத்திட்டம்:

| வினாத்தாளின் பெயர் | பாடத்தின் பாடத்திட்டம் |
|---|---|
| 01. பொது அறிவு | வேலையுடன் தொடர்புடையதான கணிப்பீட்டு திறமையை மதிப்பிடுதல் மற்றும் பொது அறிவு மட்டத்தைப் பரீட்சித்தல் |
| 02. நுண்ணறிவுப் பரீட்சை | சொற்கள் மற்றும் எண்களாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரச்சினைகள் சம்பந்தமான தொடர்பை அதனுடன் இணைந்ததாக மற்றும் புரிந்து கொள்ளுதல் நம்பத் தகுந்த மற்றும் மிகச்சாமானிய மற்றும் நல்ல வாய்ப்புகளுக்கிடையில் பரீட்சார்த்தி பெற்றுள்ள திறமையை அளத்தல் இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. |

# வட மாகாண சுகாதார அமைச்சின் கீழான திணைக்கள சேவையின் ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதிக்குரிய படகோட்டுநர் பதவிக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

01. பரீட்சை வகை: வாய்மொழிமூலமான பரீட்சை

02. பரீட்சை தொடர்பான விபரங்கள்

| வினாத்தாள் | உச்சப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்குவிதியும், தாபனவிதிக் கோவை தொடர்பான அறிவும் | 100 | 40% |

03. பரீட்சையை நடத்தும் அதிகாரி:

செயலாளர், மாகாண சுகாதார அமைச்சு, வட மகாாணம்.

04. எவ்வெப்போது பரீட்சை நடாத்தப்படும்: ஒரு வருடத்துக்கு இரு தடவைகள்

05. பரீட்சைக்கான பாடத்திட்டம்:

| விடயம் | பாடத் திட்டம் |
|---|---|
| 1. வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்குவிதி (1817/30 இலக்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது) | 1. நியமனங்கள்<br>2. தகுதிகாண் காலம்<br>3. பதிற்கடமை காலம்<br>4. பதவியில் உறுதிப்படுத்தல்<br>5. வினைத்திறன் காண் தடைப்பரீட்சை<br>6. இடமாற்றங்கள் |
| 2. தாபன விதிக்கோவை | VI சம்பளங்கள்<br>XII விடுமுறை<br>XIII புகையிரத ஆணைச்சீட்டுகள்<br>XIV தீவுக்குள் கடமை<br>XXIV சம்பளக் கடன் மற்றும் முற்பணம்<br>XXX அரசியல் உரிமைகளைப் பாவித்தல்<br>XLVII பொது நடத்தை மற்றும் ஒழுக்கம்<br>XXVII தொடர்பாடல் வழிமுறை<br>XXVIII நிர்வாக நடைமுறை |

## வட மாகாண சுகாதார அமைச்சின் கீழான திணைக்கள சேவையின் ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதிக்குரிய படகோட்டுநர் பதவிக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

01. பரீட்சை வகை: வாய்மொழிமூலமான பரீட்சை

02. பரீட்சைகள் சம்பந்தமான விபரங்கள்:

| விடயம் | உச்சப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| 01. தாபன விதிக்கோவை மற்றும் நிதி பிரமாணம் தொடர்பான அறிவு | 100 | 40% |
| 02. விடய அறிவு | 100 | 40% |

03. பரீட்சையை நடத்தும் அதிகாரி:
செயலாளர், மாகாண சுகாதார அமைச்சு, வட மாகாணம்

04. எவ்வெப்போது பரீட்சை நடாத்தப்படும்: ஒரு வருடத்துக்கு இரு தடவைகள்

05. பரீட்சைக்கான பாடத்திட்டம்

| விடயம் | பாடத்திட்டம் |
|---|---|
| 01. தாபன விதிக்கோவை | VI சம்பளங்கள்<br>XII விடுமுறை<br>XIII புகையிரத ஆணைச்சீட்டுகள்<br>XIV தீவுக்குள் கடமை<br>XXIV சம்பளக் கடன் மற்றும் முற்பணம்<br>XXX அரசியல் உரிமைகளைப் பாவித்தல்<br>XLVII பொது நடத்தை மற்றும் ஒழுக்கம்<br>XXVII தொடர்பாடல் வழிமுறை<br>XXVIII நிர்வாக நடைமுறை |
| 02. நிதிப்பிரமாணம் | FR-136-139 அனுமதியளித்தல், அதிகாரமளித்தல். சான்றுபடுத்தல், கொடுப்பனவு செய்தல் |
| 03. விடய அறிவு | கடமை தொடர்பான அறிவை பரிசீலித்தல் |

## வட மாகாண சுகாதார அமைச்சின் கீழான திணைக்கள சேவையின் ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதிக்குரிய படகோட்டுநர் பதவிக்கான மூன்றாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

01. பரீட்சை வகை: வாய்மொழிமூலமான பரீட்சை

02. பரீட்சைகள் சம்பந்தமான விபரங்கள்:

| விடயம் | உச்சப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| கடமையின் விஷேட அறிவு | 100 | 40% |

03. பரீட்சையை நடத்தும் அதிகாரி

செயலாளர், மாகாண சுகாதார அமைச்சு, வட மாகாணம்.

04. எவ்வெப்போது பரீட்சை நடாத்தப்படும் :- ஒரு வருடத்துக்கு இரு தடவைகள்

05. பரீட்சைக்கான பாடத்திட்டம்

| விடயம் | பரீட்சையின் பாடத்திட்டம் (நோக்கம்) |
|---|---|
| கடமையில் விஷேட அறிவு | முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளின் பாடத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக, சேவை மூப்புக்குப் பொருத்தமாக, உத்தியோகத்தரின் அறிவு மற்றும் திறமை முன்னேற்றம் அடைந்துள்ளது சம்பந்தமாக மற்றும் கழிந்த காலப்பகுதியில் குறித்த களத்தில் ஏற்பட்ட காலத்துக்கேற்றவாறானவைகள் சம்பந்தமாக அவர் உணர்வைப் பெற்றுள்ளாரா என அளக்கும் ஒரு பரீட்சையாகும். |

*படிவம்: GP/G/1*

வட மாகாண சுகாதார அமைச்சின் கீழான திணைக்கள சேவையின் ஆரம்பமட்ட பகுதித்தேர்ச்சி வகுதிக்குரிய படகோட்டுநர் பதவியின்
தரம் II / தரம் I / விஷேட தர பதவி உயர்வுக்கான விண்ணப்பம்

1. உத்தியோகத்தருடைய விபரங்கள் :

1.1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் : ………………………………………………………………

……………………………………………………………………………………………

1.2. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ……………………………………………

1.3. கடமை இடம் மற்றும் முகவரி : ……………………………………………………

……………………………………………………………………………………………

.1.4. விண்ணப்பதாரின் பதவி மற்றும் தரம்: ………………………………………………

1.5. விண்ணப்பதாரின் பதவிக்குரிய சேவை வகுதி : ………………………………

2. நியமனத்துக்குச் சம்பந்தமுடைய விபரங்கள்

2.1. நியமனத் திகதி : ……………………………………………………………………

2.2. நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி : …………………………………

2.3. வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை தொடர்பான விபரங்கள்:

| தொடர் இல | சித்தியடைந்த வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் விபரம் | சித்தியடைய வேண்டிய திகதி | சித்தியடைந்த திகதி |
|---|---|---|---|
| 01 | 1 வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை | | |
| 02 | 2 வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை | | |
| 03 | 3 வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை | | |

2.4. மொழித் தேர்ச்சியின் மட்டம் மற்றும் அத்தேர்ச்சியைப் பெற்ற திகதி : பொருத்தமற்றது.

3. பதவி உயர்வுக்குச் சம்பந்தமுடைய விபரங்கள்:

3.1. பதவி உயர்வு கிடைக்கவேண்டிய தரம் : தரம் II / தரம் I / விஷேட தரம்

3.2. பதவி உயர்வு கிடைக்கவேண்டிய பிரிவு : பொது

3.3. தரம் III / தரம் II / தரம் I இல் ஒன்பது (9) / பத்து(10) வருட சேவை பூரணமாகும் திகதி : ……………………………………

4. விண்ணப்பதாரியின் வெளிப்படுத்துகை :

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதனகத்துக் கொடுக்கப்பட்ட விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவையென பதவி உயர்த்தப்படுவதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் தகுதி அற்றனவாக்கப்படுவதற்கு நானே பொறுப்பாளியாவேன் எனவும், அல்லது அவ்வாறு, பதவி உயர்வின் பின் கண்டு பிடிக்கப்பட்டால் எனது பதவி உயர்வைச் செல்லத்தகாததாக்குவதற்கு நானே பொறுப்பாளியாவேன் எனவும் இத்தால் நான் வாக்குக் கொடுக்கின்றேன். ஆரம்ப மட்ட பகுதித்தேர்ச்சி வகுதியின் சேவையில் ………………………… முதல் தரம் II / தரம் I / விஷேட தரத்திற்கு என்னைப் பதவி உயர்த்துமாறு நான் கோருகின்றேன்.

திகதி :- ……………………

……………………………………………
உத்தியோகத்தரின் கையொப்பம்

5. நிறுவனத்தலைவரின் சிபாரிசு:

இவ்வலுவலர்,

i. பத்து(10) / ஒன்பது (9) வருடங்களான செயல்திறன் சேவையைப் பூரணப்படுத்தியுள்ளார்/ பூரணப்படுத்தவில்லை.

ii. பதவி உயர்வுக்கு உடன் முந்தியதான ஐந்து(5) வருட காலப்பகுதியினுள் திருப்திகரமான அல்லது அதற்கு உயர்மட்ட செயலாற்றுகையைக் காட்டியுள்ளார் / காட்டவில்லை.

iii. கூறப்பட்ட பத்து வருடங்களான காலப்பகுதியினுள் அரைச் சம்பள / சம்பளமற்ற விடுப்பைப் பயன்படுத்தி உள்ளார் / பயன்படுத்தவில்லை.

iv. கூறப்பட்ட காலப்பகுதியில், எச்சரிக்கை தவிர, தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் / உட்படுத்தப்படவில்லை.

v. உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை பூர்த்தியாகாததாக இல்லை / பூர்த்தியாகாமல் உள்ளது.

vi. சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்கான எல்லா சம்பள ஏற்றங்களும் உழைக்கப்பட்டுள்ளன / உழைக்கப்படவில்லை.

vii. இவர் பதவியில் ……………….. முதல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் / உறுதிப்படுத்தப்படவில்லை.

viii. 1வது, 2வது 3வது வினைத் திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் / சித்தியடையவில்லை.

ix. மற்றைய அரச கருமமொழியில் சித்திபெறும் தேவைப்பாட்டைப் பூரணப்படுத்தியுள்ளார் / பூரணப்படுத்தவில்லை.

மேற்படி விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் திருப்திப்படுவதுடன் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் திரு/திருமதி/செல்வி ………………………………………… ஆரம்ப மட்ட பகுதித்தேர்ச்சி வகுதிக்குரிய சேவையின் தரம் II / தரம் I / விஷேட தரத்திற்கு பொது நிறைவேற்றுகையின் கீழ் பதவி உயர்த்தப்படுவதற்கான எல்லாத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளார். அதற்கிணங்க முன்கூறப்பட்ட உத்தியோகத்தரின் தரம் II / தரம் I / விஷேட தரத்திற்கான பதவி உயர்வு சிபாரிசு செய்யப்பட்டு அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

திகதி : ………………………… ……………………………………………………

பணிப்பாளர்

**6. திணைக்களத்தலைவரின் சிபாரிசு:**

செயலாளர்,
மாகாண சுகாதார அமைச்சு,
வட மாகாணம்.

மேற்படி பணிப்பாளரால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை / சரியற்றவை என நான் தெரிவித்துக்கொள்வதுடன் அதற்கிணங்க மேற்படி பணிப்பாளரின் சிபாரிசுடன் நான் இணங்குகின்றேன் / இணங்கவில்லை.

திகதி : …………………… ………………………………………

திணைக்களத் தலைவர்